செ.வெ.எண்: 118 நாள்: 08.02.2020

**மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளது.**

**மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தகவல்.**

---

மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் நடைபெற உள்ளது. இதுகுறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்ததாவது.

2019-2020 ஆம் ஆண்டிற்கு மாண்புமிகு முதலமைச்சர் கோப்பைக்கான மாவட்ட அளவிலான விளையாட்டுப் போட்டிகள் ஆடவர் மற்றும் மகளிர் இருபாலருக்கும் கீழ்க்கண்டுள்ளபடி நடத்தப்பட உள்ளது. 17.02.2020 அன்று காலை 8.00 மணி முதல் ஆடவர் மற்றும் மகளிருக்கான வளைகோல்பந்து, ஜீடோ மற்றும் கூடைப்பந்து விளையாட்டுப் போட்டிகளும், ஆடவருக்கான கபாடி மற்றும் கையுந்துபந்து விளையாட்டுப் போட்டிகளும் புதுக்கோட்டை மாவட்ட விளையாட்டரங்கத்தில் நடத்தப்படவுள்ளது.

ஆடவர் மற்றும் மகளிருக்கான டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகள் ஆபீசர்ஸ் கிளப் (பழைய பஸ்ஸ்டான்ட் எதிரில்) புதுக்கோட்டையிலும், ஆடவர் மற்றும் மகளிருக்கான இறகுப்பந்து விளையாட்டுப் போட்டிகள் SDAT INDOOR GROUND புதுக்கோட்டை (இராணியார் அரசு மகளிர் மேல்நிலைப் பள்ளி அருகில்) நடத்தப்படவுள்ளது.

18.02.2020 அன்று காலை 8.00 மணி முதல் மகளிருக்கான கையுந்துபந்து மற்றும் கபாடி விளையாட்டுப் போட்டிகளும், ஆடவர் மற்றும் மகளிருக்கான நீச்சல், தடகளம் மற்றும் குத்துச்சண்டை விளையாட்டுப் போட்டிகள் மாவட்ட விளையாட்டரங்கத்தில் நடத்தப்படவுள்ளது.

போட்டிகளில் கலந்து கொள்பவர்கள் 31.12.2019 அன்று 25 வயதிற்கு உட்பட்டவர்களாக (25 வயது பூர்த்தி அடையாதவர்களாக) இருத்தல் வேண்டும். 01.01.1995 அன்றோ அல்லது அதற்கு பின்னர் பிறந்தவர்களாக இருத்தல் வேண்டும். இதற்கான சான்றிதழ்கள் கண்டிப்பாக சமர்ப்பிக்க வேண்டும்.

தடகள போட்டி நிகழ்வு விபரம் ஆடவர் 100 Mts., 200 Mts., 400 Mts., 400 Mts. Hurdles, 1,500 Mts., 10.000 Mts., Pole Vault, Long Jump, Hammer Throw and Javelin Throw for Men – 10 events, மகளிர் 100 Mts., 200 Mts., 800 Mts., 1,500 Mts., 5,000 Mts., 400 Mts. Hurdles, Pole Vault, Long Jump, Hammer Throw and Javelin Throw for Women – 10 events

நீச்சல் போட்டி நிகழ்வு விபரம்: ஆடவர் 100 Mts. Back stroke, 100 Mts. Breast stroke, 100 Mts. Butter fly, 200 Mts. Butter fly, 200 Mts. Back stroke, 200 Mts. Breast stroke, 400 Mts. Individual Medley and 1,500 Mts. Free Style for Men – 8 events. மகளிர் 100 Mts. Back stroke, 100 Mts. Breast stroke, 100 Mts. Butter fly, 200 Mts. Butter fly, 200 Mts. Back stroke, 200 Mts. Brest stroke, 400 Mts. Individual Medley and 800 Mts. Free Style for Women – 8 events.

ஜீடோ போட்டி நிகழ்வு விபரம் ஆடவர் 60 Kg., 66 Kg., 73 Kg., 81 Kg., 90 Kg., 100 Kg., and + 100 Kg. – 7 events, மகளிர் 48 Kg., 52 Kg., 57 Kg., 63 Kg., 70 Kg., 78 Kg., and + 78 Kg. – 7 events.

குத்துச்சண்டை போட்டி நிகழ்வு விபரம் ஆடவர் Up to 49 Kg., 49 – 52 Kg., 52 – 56 Kg., 56 – 60 Kg., 60 – 64 Kg., 64 – 69 Kg., 69 – 75 Kg., 75 – 81 Kg., 81 – 91 Kg., and + 91 Kg. – 10 events. மகளிர் Up to 48 Kg., 48 – 51 Kg., 51 - 54 Kg., 54 – 57 Kg., 57 – 60 Kg., 60 – 64 Kg., 64 – 69 Kg., 69 – 75 Kg., 75 – 81 Kg and + 81 Kg. – 10 events.

இறகுப்பந்து (ஆடவர் மற்றும் மகளிர்) இறகுப்பந்து விளையாட்டுப் போட்டிகள் புதுக்கோட்டை மாவட்ட இறகுப்பந்து கழகம் (விளையாட்டரங்கம்) ,புதுக்கோட்டை (இராணியார் மகளிர் மேல்நிலைப் பள்ளி அருகில்)நடத்தப்படும்.

டென்னிஸ் (ஆடவர் மற்றும் மகளிர் டென்னிஸ் விளையாட்டுப் போட்டிகள் ஆபிசர்ஸ் கிளப் புதுக்கோட்டை (பழைய பஸ்டான்ட்எதிரில்) நடத்தப்படும். குழுப் போட்டிகள்அனைத்தும் Knock out-Cum-League முறையில் நடத்தப்படும்.

பிறப்புச் சான்றிதழ் (Date of Birth certificate), தலைமையாசிரியர், முதல்வரிடமிருந்து பெறப்பட்ட வயதுச் சான்றிதழ் கட்டாயமாக கொண்டு வருதல்

வேண்டும். சான்றினை சமர்ப்பிக்காதவர்கள் மாவட்ட அளவிலான போட்டியில் கலந்து கொள்ள கண்டிப்பாக அனுமதிக்கப்படமாட்டார்கள்.

மாவட்ட அளவிலான தடகளம், நீச்சல் மற்றும் குழுப் போட்டிகளில் முதலிடம் பெற்ற அணியினர் தமிழ்நாட்டில் குறைந்தது ஐந்து வருடங்களாவது வசித்து வருவதற்கான புகைபடத்துடன் கூடிய சான்றினை (Ration Card Xerox, Voter ID Xerox, Driving Licence Xerox, School Mark Sheet Xerox) மாநில அளவிலான போட்டியில் பங்கு கொள்வதற்கு ஏதுவாக மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். சான்றினை சமர்ப்பிக்காதவர்கள் மாநில அளவிலான போட்டியில் கலந்து கொள்ள கட்டாயமாக அனுமதிக்கப்படமாட்டார்கள்.

தேர்வு பெற்றவர்கள் உடனடியாக Original Nativity Certificate or Residential certificate கொண்டு வந்து, மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்வதற்கு ஏதுவாக மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலரிடம் சமர்ப்பித்தல் வேண்டும். தடகளம் மற்றும் நீச்சல் போட்டியில் முதலிடம் பெறுபவர்கள், குழு விளையாட்டுப் போட்டியில் தேர்வுக்குழு மூலம் தேர்வு செய்யப்படுபவர்கள் மட்டுமே மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவார்கள்.

மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ள, விளையாட்டு வீரர்கள், வீராங்கனைகள் சொந்த (Native) மாவட்டத்திற்காகவோ, பணிபுரியும் மாவட்டத்திற்காகவோ, பள்ளி, கல்லூரியில் படிக்கும் மாவட்டத்திற்காகவோ விளையாட அனுமதிக்கப்படுவார்கள். அதற்குரிய ஆதாரங்கள் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் அவர்களிடம் சமர்ப்பித்தல் வேண்டும்.

மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ளும் போட்டியாளர்களுக்கு பயணப்படி, தினப்படி வழங்கப்படமாட்டாது. மாவட்ட அளவிலான போட்டிகளில் வெற்றி பெறுபவர்களுக்கு சான்றிதழ் மற்றும் முதல் பரிசு ஒரு நபருக்கு ரூ.1,000 வீதம், இரண்டாம் பரிசு ஒரு நபருக்கு ரூ.750 வீதம், மூன்றாம் பரிசு ஒரு நபருக்கு ரூ. 500 வீதம் பரிசுத்தொகை காசோலை மூலம் வழங்கப்படும் மாவட்ட அளவிலான குழு விளையாட்டுப் போட்டிகளில் முதலிடம், தேர்வு செய்யப்படுபவர்கள் மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்

மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான தனிநபர் மற்றும் குழு விளையாட்டுப் போட்டியில் பங்கு கொள்ள வீரர்கள், வீராங்கனைகள் மற்றும் அணிமேலாளர்களுக்கு பயணப்படி மற்றும் தினப்படி தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையத்தால் வழங்கப்படும். மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகள் நடத்தப்படும் இடம் மற்றும் தேதி பின்னர் தெரிவிக்கப்படும். மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான விளையாட்டுப் போட்டிகளில் பங்கு பெறும் விளையாட்டு வீரர்கள் மற்றும் வீராங்கனைகளுக்கு கண்டிப்பாக ஊக்க மருந்து பரிசோதனை செய்யப்படும்.

மாநில அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான தனிநபர், குழு விளையாட்டுப் போட்டியில் முதல் மூன்று இடங்களைப் பெறும் அணி வீரர்கள், வீராங்கனைகளுக்கு தலா ரூ.1.00 லட்சம், ரூ.75,000 மற்றும் ரூ.50,000 பரிசுத் தொகையாக வழங்கப்படும். மாவட்ட அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ளும் வீரர், வீராங்கனைகள் ஆன்லைன்னை பயன்படுத்தி www.sdat.tn.gov.in என்ற இணையதள முகவரியில் பதிவு செய்ய கேட்டுக் கொள்ளப்படுகிறார்கள். மாவட்ட அளவிலான தடகளம் மற்றும் நீச்சல் போட்டிகளில் முதலிடம் பெற்றவர்கள் மாநில அளவிலான போட்டிகளில் கலந்து கொள்ள அனுமதிக்கப்படுவர்.

மாவட்ட அளவிலான முதலமைச்சர் கோப்பைக்கான குழு விளையாட்டுப் போட்டிகள், தடகளம் மற்றும் நீச்சல் விளையாட்டில் கலந்து கொள்ளும் அனைத்து வீரர், வீராங்கனைகள் INAUGURATION 17.02.2020 அன்று காலை 7.00 மணிக்குள் தங்களது, தங்கள் அணியின் பெயரினை உரிய சான்றுகளுடன் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர், புதுக்கோட்டை அவர்களிடம் மாவட்ட விளையாட்டு மற்றும் இளைஞர் நலன் அலுவலர் தமிழ்நாடு விளையாட்டு மேம்பாட்டு ஆணையம், விளையாட்டரங்கம், புதுக்கோட்டை என்ற முகவரியில் பதிவு செய்து கொள்ள வேண்டும். மேலும் விபரங்களுக்கு தொலைபேசி எண் 04322-222187, அலைபேசி எண் 7401703498 என்ற எண்களில் தொடர்பு கொள்ளலாம். இவ்வாறு மாவட்ட ஆட்சித்தலைவர் திருமதி.பி.உமாமகேஸ்வரி, இ.ஆ.ப., அவர்கள் தெரிவித்துள்ளார்.

---

**செய்தி வெளியீடு - செய்தி மக்கள் தொடர்பு அலுவலகம், புதுக்கோட்டை.**